# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை 2014–2015ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கை எண்.54ன் அறிவிப்புகள்

## வனம்

**1. மரபுவழி சந்தன மரப்பகுதிகளில் இயற்கையான மறு உற்பத்திக்கு உதவிடுதல்**

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 2014–15ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வேலூர், சேலம், ஈரோடு, தர்மபுரி மற்றும் திருச்சி மண்டலங்களின் மரபுவழி சந்தன மரப்பகுதிகளில் சந்தன மரத்தோட்டங்களை மீட்டெடுக்க இயற்கை மறு உற்பத்திக்கு ரூ.5 கோடி வழங்கப்படும்.

**2. தரம் வாய்ந்த மரக்கன்றுகள் வழங்கிட மத்திய நாற்றங்கால்கள் ஏற்படுத்துதல்**

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்ட வன விரிவாக்க மையங்களிலும், தேவையான வேறு இடங்களிலும் பொதுமக்களின் தேவைக்கு தரமான மரக்கன்றுகள் வளர்த்து விநியோகம் செய்திட மத்திய நாற்றங்கால்கள் ஏற்படுத்துதல் அவசியமாகிறது. ரூ.4.8 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் இந்த 32 மத்திய நாற்றங்கால்கள் “விரிவாக்க மையங்களாகவும்” செயல்படும்.

**3. திருச்சி வனத்தோட்டக் கழகத்தில் தைல மற்றும் முந்திரித் தோட்டங்கள் வளர்த்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு வனத்தோட்டக்கழகமானது தொடர்ந்து வருவாய் ஈட்ட, ரூ.11.35 கோடி செலவில் 4000 எக்டேர் பரப்பில் கூழ்மரத் தோட்ட உற்பத்தியும், ரூ.2.52 கோடி செலவில் 1000 எக்டேர் பரப்பில் முந்திரித் தோட்ட உற்பத்தியும் மேற்கொள்ளப்படும்.

**4. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு நிதி உதவி**

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதார வசதிகளை மேம்படுத்தவும், தேயிலைப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தவும், இக்கழக தொழிற்சாலைகளை நவீனமயமாக்கவும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை உயர்த்த நிதி உதவி வழங்கப்படும்.

**எம்.எஸ்.எம்.ஆனந்தன்**
**வனத்துறை அமைச்சர்.**